# ஐஐஎம் நிறுவனத்தில் பல்கலை. தரத்தில் முதுகலை படிப்பு

## இயக்குனர் பெருமிதம்

திருச்சி, பிப். ௨-

திருச்சி ஐஐஎம் கல்வி நிறுவனத்தில் நடத்தப்படும் முதுகலை பட்டப்படிப்புகளுக்கு வழங்கப்படும் சான்றிதழ் இந்திய பல்கலைக் கழகங்களில் வழங்கப்படும் சான்றிதழ்களுக்கு இணையானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் 11வது ஐஐஎம் ஆன திருச்சி ஐஐஎம்மில் முதுகலை மேலாண்மை, முதுகலை வணிக மேலாண்மை, ஆராய்ச்சி படிப்புகளை வழங்கி வருகிறது. இதில் வணிக மேலாண்மை படிப்பு சென்னை வளாகத்தில் வழங்கப்படுகிறது. இந்த 3 பட்டப் படிப்பு முடித்தவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ் இந்திய பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் பட்டப் படிப்புக்கு இணையானது அகில இந்திய பல்கலைக்கழகங்களின் சங்கம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மேற்படிப்புக்கு வெளிநாடுகளுக்கு செல்லும் திருச்சி ஐஐஎம் மாணவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஏற்கனவே பல்கலைக் கழகங்களுக்கு இணையான சான்றிதழ் அந்தஸ்து பெற்றுள்ள அகமதாபாத், லக்னோ, இந்தூர், பெங்களூரு, கோல்கத்தா, கோழிக்கோடு ஆகிய ஐஐஎம்கள் வரிசையில் திருச்சி ஐஐஎம்மும் இணைந்துள்ளது என திருச்சி ஐஐஎம் இயக்குநர் பிரபுல்லா அக்னிஹோத்ரி தெரிவித்துள்ளார்.